செய்தி வெளியீடு எண்.216 நாள் 08.03..2010

## சிறப்பாக செயல்படும் பால் உற்பத்தியாளர்களுக்கு பரிசு, பாராட்டு பத்திரங்களையும் மற்றும் +2 வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற ஆவின் ஊழியர்களின் குழந்தைகளுக்கு மடிக்கணினிகளையும் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் பால்வளத்துறை சார்பாக தலைமைச்செயலகத்தில் இன்று 08.03.2010 நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அளவில் தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு அதிகமாக பால் வழங்கிய 10 உறுப்பினர்களுக்கு ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்களும், மாநில அளவில் சிறந்த 3 சங்கங்களின் செயலாளர்களுக்கு ஊக்கப்பரிசு மற்றும் சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும், +2 தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று சிறப்பாக தேர்ச்சி பெற்ற 10 ஆவின் ஊழியர்களின் குழந்தைகளுக்கும், தொடக்க பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்களின் 5 குழந்தைகளுக்கும் மற்றும் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களிலிருந்து 16 பால் உற்பத்தியாளர்களின் குழந்தைகளுக்கும் ஆகமொத்தம் 31 குழந்தைகளுக்கு மடிக்கணினிகளை துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

பரிசுகள் பெற்ற பால் உற்பத்தியாளர்கள் இதுபோன்று பரிசுகளும் பாராட்டுப்பத்திரமும் பால் உற்பத்தியாளர்களுக்கு அரசு அளவில் வழங்குவது இதுவே முதல்முறை என்றும், இதன்காரணமாக பால் உற்பத்தியாளர்கள் ஊக்கம் அடைவார்கள் என்றும், இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தியதற்காக தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களுக்கும் மற்றும் துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தங்களது நன்றியை தெவித்தனர்.

மடிக்கணினிகளை பெற்ற மாணவ மாணவியர்களின் பெற்றோர்கள் இத்திட்டம் குழந்தைகளின் கல்வித்திறனை மேலும் ஊக்குவிக்கும் என மகிழ்ச்சியுடன் பாராட்டினார்கள். தமிழக அரசின் இந்த மகத்தான திட்டத்திற்கு ஆவின் ஊழியர்களும், பால் உற்பத்தியாளர்களும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியினை தொடர்ந்து, இந்தியத் தர நியம நிறுவனம் (BIS) சென்னை ஆவின் நிறுவனத்திற்கு சிறப்பான சுற்றுப்புறசூழல் மேலாண்மையை மேற்கொண்டு வருவதன் அடிப்படையில் உலகத்தரத்திற்கான ISO 14001 : 2004 சான்றிதழை தென் பிராந்திய துணை இயக்குநர் ஜெனரல் திரு கே.அன்பரசு அவர்கள் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் ஆவின் நிறுவனத்திற்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு உ. மதிவாணன், தலைமைச்செயலாளர் திரு கே.எஸ். ஸ்ரீபதி, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலர் திரு சி.முத்துக்குமாரசாமி, பால்வளத்துறை ஆணையர் மற்றும் ஆவின் நிர்வாக இயக்குநர் திரு அபூர்வ வர்மா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.